எல்லா வகையிலும் வசதியானது. சமீபத்தில் இருக்கும் இடம், போக்குவரத்து மற்றும் ரயில்வே துறையினுடைய நிர்வாக வசதிக்கு திருவனந்தபுரத்தைச் சிறந்ததாகக் கருதுகிறார்கள். எனவே மதுரையோடு சேர்க்க இயலாது என்று தெரிவித்திருக்கிறார்கள். இருந்தாலும் ரிசர்வேஷன் போன்றவைகளில் குறைபாடுகள் இருக்குமானால் அவைகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டுமென்று வற்புறுத்தலாம்.

திரு. ஒய். வெங்கடேஸ்வர தீட்சிதர் : மாண்புமிகு துணைச் சபாநாயகர் அவர்களே, அகல ரயில் பாதை பற்றிப் பலர் பலவிதமாகச் சொன்னார்கள். கரூர்—திண்டுக்கல் ரயில் பாதை போட்டு, அங்கே பேசஞ்சர் ரயில் ஓடுகிறதா? அப்படி என்றால் அதில் பேசஞ்சர்கள் போகிறார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு துணைத் தலைவரவர்களே, the only pair of passenger trains scheduled to run on Karur-Dindigul line stand cancelled temporarily.

இராதாபுரத்தில் அரசு கட்டும் வீடுகள்.

*11990—**திருமதி ரமணி நல்லதம்பி** :

மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) திருநெல்வேலி–கட்டபொம்மன் மாவட்டம், இராதாபுரம் தொகுதி, கோட்டைக் கருங்குளம் மின்உபநிலையம் அருகில் சுமார் 50 வீடுகளை அரசு கட்டி முடித்துவிட்டதா?

(ஆ) அவ்வாறாயின் மக்கள் எப்போது அவைகளில் குடியமர்த்தப்படுவார்கள்?

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : இல்லை.

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரவர்களே, நான் இங்கே குறிப்பிட்டிருக்கின்ற அந்த வீடுகள் அனைத்தும் எஸ். சி. சமுதாயத்தினருக்காகக் கட்டப்பட்ட வீடுகள். பல ஆண்டுகளாக அவை மேற்கூரை இல்லாமல் நான்கு சுவர்களோடு நின்று கொண்டிருக்கின்றன. மேலும் அவை ஊருக்கு வெளியே தள்ளி இருக்கின்றன. அதிலே போட்ட முதலீடு வீணாகிக் கொண்டிருக்கிறது. எனவே அவற்றைக் கட்டி,

யாருக்காக அவை கட்டப்பட்டதோ அவர்களை அதிலே குடியேற்ற அரசு துரித நடவடிக்கை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : துணைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டு இருக்கக்கூடிய இடத்தில் வீட்டுவசதி வாரியத்தின் சார்பில் ஏதாவது திட்டம் இருக்கிறதா என்ற கேள்விக்குத்தான் 'இல்லை' என்ற பதில் சொல்லப்பட்டு உள்ளது. ஆனால் தாழ்த்தப்பட்டோருக்காகக் கட்டப்பட்ட வீடுகளாகவோ அல்லது வேறு திட்டத்தின் கீழ் கட்டப்பட்ட வீடுகளாகவோ உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய வீடுகள் இருக்கலாம் என்று கருதுகிறேன். ஆனால் வீட்டு வசதி வாரியத்தின் சார்பில் அப்படிப்பட்ட திட்டம் எதுவும் இராதாபுரம் கோட்டைக்கருங்குளம் உப மின் நிலையம் அருகில் கட்டப்படவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

9-35 மணி

திருமதி ரமணி நல்லதம்பி : மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டதைப்போல பல்லாண்டு காலமாக வெறும் சுவர்களாக நின்று கொண்டிருக்கின்றன. அதை யார் கட்டி இருந்தாலும் அதன் பயன் மக்களைச் சென்றடைகின்ற வகையிலே அந்தப் பணிகள் துரிதப்படுத்தப்பட வேண்டும். அது போலவே மீனவர்களுடைய குடியிருப்புகளும் இடிந்து பாழடைந்த நிலையில் இருக்கின்றன. அவைகளையும் பழுது பார்ப்பதற்கு அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மு. கண்ணப்பன் : துணைத் தலைவர் அவர்களே, அது எந்தத் துறையின் சார்பில் கட்டப்பட்டது என்பதைக் கவனித்து உடனடியாக நடவடிக்கை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளலாம். தமிழ்நாட்டில் ராதாபுரம் தொகுதியைப் பொறுத்தவரையில் தற்போது சென்ற ஆண்டு அறிவிக்கப்பட்ட திட்டத்தின்கீழ் ஒரு இலட்சம் வீடுகள் 500 நகர்ப் பகுதிகள், கிராமப் பகுதிகளில் கட்டுவதற்கு நாம் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற அந்தத் திட்டத்தின் அடிப்படையில் ராதாதபுரம் தொகுதியிலுள்ள வள்ளியூரில் சுமார் $14\frac{1}{2}$ ஏக்கர் நிலத்தில் 239 வீடுகள் கட்டுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன.

நலிவுற்ற கலைஞர்களுக்கு உதவி வழங்கும் திட்டம்.

*1821. திரு. மு. இராமநாதன் :—மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) நாடகக் கலைஞர்கள், இசைவாணர்கள், நாதஸ்வரக் கலைஞர் உள்ளிட்ட கலைஞர் பெருமக்களுக்கு உதவி வழங்கும்